RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1966

OPEN ACCESS

# மருதத்திணைப் பாடல்களில் புலப்படும் அறச்சிந்தனைக் கருத்துக்கள்

ந. ஜெயந்தி [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620017, தமிழ்நாடு, இந்தியா

# Virtues in Marutathinai Hymns

N. Jayanthi [a, *]

[a] Research Department of Tamil, Bishop Heber College, (Autonomous), Tiruchirappalli-620017, Tamil Nadu, India

* Corresponding Author: jayanthiravichandran14@gmail.com

Received: 13-08-2022
Revised: 16-10-2022
Accepted: 03-11-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

Philosophical thoughts are rich in Palantami literature. Virtue is the beginning of everything. Following good deeds in life helps a man to get more wealth and good health. Everything in life should be based on virtue. Virtue is the foremost when compared with love, wealth and home. The moral values and good deeds that are to be followed by the people are described in the Sangam literary texts. The ancient Tamil people believed that being a moral thinker is necessary. Sangam literary works conveys the idea that pleasure is obtained by doing virtue. Ancient Tamils considered the household as an ideal setting for virtue, by providing good surrounding and hospitality to the guests. All these things are explained well in Maruthathinai hymns.

**Keywords:** Marutathinai, literature, Good Health,

## முன்னுரை

தொல்காப்பியர் வகுத்த திணைக்கோட்பாடு காலத்தால் அழியாத தன்மையுடையதாகத் திகழ்கிறது. அவ்வகையில் மருதத்திணை என்பது வயலும் வயல்சார்ந்த இடமாகும். இந்நில மக்களின் அறச்சிந்தனைகள் மானுட வாழ்வில் மேம்படும் அறக்கருத்துக்கள் விரவிக் காணப்படுகின்றன. அக்கருத்துக்களை எதிர்கால சந்ததியினர் அறிந்து அவ்வறவழியில் நடக்க ஏதுவாக இக்கலம் அமைகிறது. மேலும் மனித இனத்தைப் பண்படுத்திப் பாத்திரமாக்கும் பக்குவம் பெற்று விளங்குகிறது. இந்திணைப்பாடல்வழி செம்மாந்த அறக்கருத்துக்களைச் சிறப்புடன் பொருத்தி வாழ ஓர் ஊன்றுகோலாக அமைந்துள்ளது என்பது திண்ணம். சிறப்புடன் வாழ இத்திணப்பாடல் ஓர் ஊன்றுகோலாக அமைந்துள்ளது. திண்ணம்

## அறம்

அறம் என்பதனை மனித ஒழுக்கம் மனிதச்செயல் என்று கூறலாம். மனிதனுடைய செயல்களை ஒழுங்குப்படுத்தித் தூய்மைப்படுத்துதல் அறமாகும். "மனிதச்சிந்தனை நல்ல நோக்கத்தில் இருக்கின்ற போது தான் நற்செயல்கள் நடைபெறும் சிந்தனைகளே செயலாவதால் சிந்தனையில் கவனம் இருக்க வேண்டும். அறம் என்பது எண்ணம் சொல் செயல்கள் ஆகியவை உள்ளடக்கியது. எண்ணம் அறத்தின் நிலையாற்றலாகும் சொல் செயல் இயக்க ஆற்றலாகும். இவ்மூவகை ஆற்றலும் செயல்படும் போது அதுவே ஒழுக்கமாகின்றது. அவ்வொழுக்கமே அறமாகிறது (Ramakrishnan 1971).

## தொல்காப்பியம்

“அந்நிலை மருங்கின் அறமுதலாகிய

மும்முதற் பொருட்கும் உரிய என்ப”

என்று சுட்டுகிறது (Ilampuranar, 1958).

அறம் எனப்படுவது உலகில் வாழும் உயிர்களுக்கெல்லாம் உணவும் உடையும் இருக்க இடமும் தரல் என்கிறது.

மணிமேகலை

“அறமெனப்படுவது யாது எனக் கேட்பின்

மறவாது இதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்

உண்டியும் உடையும் உறையுளும் அல்லது

கண்டது இல்”

என்னும் அடிகள் மேற்கண்ட கருத்துக்குச் சான்று பகர்கின்றன (Silamboli chellappan, 2008).

அறம் அன்பு நிலையினை வெளிக்காட்டுவதாகும் என்பதை திருவள்ளுவர்

“முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்

இன்பசொ லினதே அறம்”

என்று வரையறுத்துள்ளார் (Parimelalhagar, 2001).

## அறம் அகராதிகள் விளக்கம்

அறம் என்னும் சொல்லிற்கு “1.நல்வினை, 2.ஐயம் 3. ஏழைகட்கு இலவசமாக மருந்தீகை 5. நலமானது 6. இன்பம் 7. தகுதியானது 8. கற்பு 9. நோன்பு 10. அறப்பயன் 11. சமயம் 12. ஓதி 13. அறச்சாலை 14. அறத்தெய்வம் 15. நடுநிலையறம் பேணும் கூற்றுவன்” என்னும் பல்வேறு பொருட்களை (செந்தமிழ் சொற்பிறப்பியல் பேரகர முதலி) தருகின்றது.

## கழகத் தமிழகராதி

அறம் என்பதற்குக் “கடமை தருமம் கற்பு இல்லறம் துறவறம் புண்ணியம் அறநூல் அறக்கடவுள்” என்றுபொருள் கூறுகிறது.

## மருதத்தினை மக்களின் பண்பாடு

மருதத்தினை மக்களின் பண்பாடு வேளாண்மை தொழில் சார்ந்த பண்பாடாகும். வயலும் வயல்சார்ந்த மருதநிலைப்பகுதியில் மக்கள் எத்தகைய ஒழுக்கலாறுகளைப் பின்பற்றி வாழமுடியுமோ அதற்கேற்றவாறு வாழும் வாழ்க்கை முறையை கொண்டதே இம்மக்களின் பண்பாடாகும்.

## திருமணத்தில் தீயினை வலம்வருதல் திருமண முழவொலி

“காதல்கொள் வதுவைநாள் கலிங்கத்துள் ஒடுங்கிய

மாதர்கொள் மான்நோக்கின் மடந்தைதன் துணையாக

ஓதுடை அந்தணன் எரிவலம் செய்வான் போல்”

என்ற பாடலடிகளின்வழி திருமணத்தில் தீயினை வலம் வருதல் திருமண முழவொலி ஆகிய தமிழ்ப்பண்பாடு சார்ந்த தகவல்கள் மருதக்கலிப் பாடல்களில் பதிவாகியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும் (Balasubramanian, 2004).

## மருதத்திணைப் பெண்களின் பண்பாட்டு அறம்

"உடுத்தும் தொடுத்தும் பூண்டும் செரீஇயும்

தழையணிப் பொலிந்த ஆயமொடு துவன்றி

விழவொடு வருதி நீயே இஃதோ

ஓர் ஆன் வல்சிச் சீர்இல் வாழ்க்கை

பெருநலக் குறுமகள் வந்தென

இனிவிழவு ஆயிற்று என்னும் இவ்வூரே"

இப்பாடல்வழி பெண்ணாகிய மனைவியால்தான் ஒரு குடும்பத்தில் செல்வம் பெருகும் என்ற நம்பிக்கையும் அந்த நம்பிக்கையின் பாற்பட்ட பண்பட்ட, அறம் நிறைந்த வாழ்க்கையும் மருதத்திணை மக்களிடம் இருந்ததை இதனால் அறியமுடிகின்றது (Swaminatha Iyer, 2009).

## அறங்கூறு அவையம்

நீதி வழங்கும் மன்றம் அறங்கூறு அவையம் எனப்பட்டது. இவ்வவை அரசனால் நியமிக்கப்பட்டதற்குப் புறநானூறு பாடல்கள் சான்றுகளாய் உள்ளன. அரசவைக் களத்தில் சான்றோரை அரசனே அமர்த்தினான் என்பதை,

"உறந்தை அவையத்து

அறம் நிறம் நிலையிற்று ஆகலின்" (Subramaniyan, 2012)

"அறம் நிலை திரியா அன்பன் அவையத்து

திறன் இல் ஒருவனை நாட்டி"

இப்பாடலடிகள் சுட்டுகின்றன (Subramaniyan, 2012). அறங்கூறு அவையத்தில் அறம் திரிந்து நீதி வழங்கினால் அதற்கான முழுப்பொறுப்பையும் அரசனே ஏற்றுக்கொள்கிறான்.

அறம் கூறு அவையத்தில் நீதி வழங்குவோர்கள் அறனிலிருந்து பிழையாது கோக்கோல் போல் நடுநிலையில் நீதி வழங்குவர்கள்

என்பதனை

"அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கி

செற்றமும் உவகையும் செய்யாது காத்து

ஞெமன் கோல் அன்ன செம்மைத்து ஆகி

சிறந்த கொள்கை அறம் கூறு அவையமும்"

இப்பாடலடிகள் உணர்த்துகின்றன (Subramaniyan, 2012).

## கொடை அறம்

செல்வத்துப்பயனே ஈதல் என்று ஈதலின் அறத்தைப் புலவர்கள் செல்வர்களுக்கும் வேந்தனுக்கும் அறிவுறுத்துகிறார்கள். செல்வம் அறவழிப்படுதல் வேண்டும் என்பது வேந்தரிடம் அறிவுறுத்தப்படுகிறது.

அறம் பொருள் இன்பம், எனும் மூன்றையும் செய்வதற்குரியதே செல்வத்துப்பயன் என்பதைப் புறநானூறு பாடல்வழி

"அதனால் அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்

ஆற்றும் பெரும்! நின் செல்வம்

ஆற்றாமை நிற் போற்றாமையே"

அறிப்படுகிறது (Subramaniyan, 2012). வள்ளல் தன்மையுடைய வீரன் ஒருவனின் வீரத்தையும் ஈரத்தையும் புகழ்ந்து பாடி பொன்னும் பாசிலும் பெற்று செல்வர் பாணரும் பொருநரும் என்பதைப் பண்டைய இலக்கியங்கள் வாயிலாக அறியப்படுகிறது. அவ்வகையில்

அஃதை என்பான் யானைகளையும் நல்ல அணிகலன்களையும் பரிசிலார்க்கு வழங்கி மகிழ்ந்த செய்தி அகநானூறு பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

"இன்கருங் கள்ளின் அஃதை களிற்றோடு

நன்கலன் ஈயும் நான்மகிழ் இருக்கை

அவை புகு பொருநர் பறையின் ஆனாறு

கழறுப் என்ப"

என்பது இம்மருதப்பாடல்வழி கொடை அறத்தை அறிய முடிகிறது (Subramaniyan, 2001).

## விருந்தோம்பல் அறம்

தொல்காப்பியர் விருந்து என்பதற்கு 'புதுமை' என்று பொருள் தருகிறார்.

"எமக்கே வருகதில் விருந்தே! சிவப்பு ஆன்று

சிறு முள் எயிறு தோன்ற

முறுவல் கொண்ட முகம் காண்கம்மே"

என்று இப்பாடல்வழி பிரிந்த தலைவனையும் தலைவியையும் ஒன்றிணைக்கும் ஆற்றல் வாய்ந்த வாயிலாக விருந்து குறிப்பிடுகிறது என்பதை இப்பாடல்வழி அறியப்படுகிறது (Balasubramanian, 2006).

தமிழர்தம் பண்பாட்டு வாழ்க்கை மரபுகளுள் விருந்து பேணுதல் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். வள்ளுவர் 'விருந்தோம்பல்' என்று அதிகாரத்தை 'அன்புடைமைக்கு' அடுத்து அமைத்துள்ளார். அன்பின் காரணமாக அமைவதே விருந்தோம்பல் ஆகும்.

மருதக்கலிப் பாடலின் தலைவன் தலையின் ஊடலைத் தீர்க்கும் பொருட்டு வீட்டிற்கு விருந்தினரை அழைத்து விருந்து பேணுவர். அதனால் தலைவியின் ஊடல் தீரும் என்று தலைவன் கருதுகிறான். இதில் தலைவியின் இல்லற மாண்பு அவள்தன் செயலால் உணர்ந்து நிற்கின்றது.

"விருந்து எதிர்கொள்ளவும் பொய்ச்சூருள் அஞ்சவும்

அரும்பெறல் புதல்வனை முயங்கக்காணவும்

ஆங்கு அவிந்து ஒழியும் என் புவிதாங்காது

அவ்அவ் இடத்தான் அவை அவை களை

பூங்கண் மகளிர் புனைநலம் சிதைக்கும்

மாய மகிழ்நன் பரத்தமை

நோவென் தோழி! கடன் நமக்கு எனவே"

இவ்வாறு மருதநிலப்பாடல்களில் அந்நிலமக்களின் இல்வாழ்க்கை சிறப்பித்து பேசப்படுவது நோக்கத்தக்கதாகும் (Balasubramanian, 2004).

## ஈகை அறம்

சங்க இலக்கியங்களில் இந்த ஈகை அறம் கொடை ஈதல் என்பன பரந்த பொருளில் அறம் என்னும் சொல் வழங்கி வந்திருக்கின்றது. இதனை

“அறம் தலைப்பரியா ஒழுகலும்” (Subramaniyan, 2001)

“அறம் செய்தீமோ அருள்வெய்யோய்”

“அறம் நிலையில் அகன் அட்டில்”

என்னும் சங்க இலக்கிய வரிகளின் மூலம் அறியலாம் (Subramaniyan, 2012). எனவே தான் இத்தகு உயரிய அறமாகிய கொடையைச் சங்ககால அரசியலில் பெரிதும் விரும்பிப் போற்றப்பெற்றது.

“ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது

ஊதியம் இல்லை உயிர்க்கு”

என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார் (Parimelalhagar, 2001). பண்டைத்தமிழர் ஈதலைவிடச் சிறந்தது ஒன்றுமில்லை என்று உணர்ந்ததினால் செல்வத்தின் பயனே ஈதல் என்று கூறியதை உணர முடிகின்றது.

## ஈகையும் இரப்போரும்

இல்லாது வருந்தி இரந்தார்க்கு அவர் வேண்டிய தொன்றைக் கொடுக்காதவன் செல்வம் பிறரால் அறியப்படாது அழிவதைப் போல தாய் பிறர் அறியாமல் பேணிப்பாதுகாத்த தன் அழகும் துன்புற்று அழிவதாக என்று பரத்தைக் கூறுகின்றார். இதனை

“வருகதில் அம்மஎன் சேரிசேர!

அரிவேய் உண்கண் அவன் பெண்டிர் காரை

தாரும் தானையும் பற்றி ஆரியர்

பிடிபயின்று தரு ஊம் பெருங்களிறு போல

தோள்கஞ தாகக் கூந்தலின் பிணித்து அவன்

மார்புகடி கொள்ளேன்ஆகின் ஆர்வுற்று

இரந்தோர்க்கு ஈயாது ஈடியோன் பொருள் போல்

பரந்து வெளிப்படாது ஆதி

வருந்துக தில்ல யாய்வோம்பிய நலனே”

என்ற மருதத்திணைப் பாடல்வழி ஈகை என்னும் அறப்பண்பு கூறப்பட்டுள்ளதை அறிய முடிகிறது (Subramaniyan, 2004).

## முடிவுரை

சங்ககாலத் தமிழர்களின் அறச்சிந்தனைகள், முற்போக்கு சிந்தனைகளாகும். உலக மக்களின் நலன் கருதி உயரிய சிந்தனைகளை மனிதன் பிறந்தது முதல் இறப்பு வரை நிகழும் நிகழ்சிகள் மற்றும் அவன் செய்யும் செயல்கள் அனைத்தும் இன்பமாக அடைய அதற்குரிய அறநெறிகளை வகுத்துள்ளனர்.

தனிமனிதனின் சிந்தனையை உயர்த்தி அறம் கற்பித்துவிட்டால் அவன் எதிர்கால சமுதாய அறத்திற்கு காவலனாகி விடுவான் என்பது சங்க சான்றோர்களின் திண்ணமாக விளங்குகிறது. அத்தகைய நோக்கில் மானிடத்தை மென்மேலும் உயர்த்தும் அறச்சிந்தனைகள் மருதப்பாடல்கள்வழி பொருந்தி வந்துள்ளதை அறிய முடிகிறது.

## References

Balasubramanian, K.V. (2004) Kalithogai, Paavai Publications, Thanjavur, India.

Balasubramanian, K.V. (2006) Nattrinai, Paavai Publications, Thanjavur, India.

Ilampuranar, (1958) Tholkappiyam Porulathikaram- Ilampuranar Urai, First Edition, Saradha pathippagam, Chennai, Tamil Nadu, India.

Parimelalhagar, (2001) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Ramakrishnan, S. (1971) Indiapanpadu Tamilarum, Meenashi Puthaga nilaiyam, Madurai, India.

Silamboli chellappan, (1998) Manimegalai mollamum uraiyum, Bharathi pathippagam, Chennai, India.

Subramaniyan S.V. (2001) Agananooru, Manivasagam Pathipagam, Chennai, India.

Subramaniyan, S.V. (2012) Pathenen Keelkanaku Noolgal, Manivasagar Pathipagam, Chennai, India.

Swaminatha Iyer, U.Ve. (2009) Kurunthogai moolamum uraiyum, U, V, SA., Library, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License